**A**

70

Register Number

**Part III**

# தாவரவியல் / BOTANY

( Tamil Version )

நேரம் : 3 மணி ]  [ மொத்த மதிப்பெண்கள் : 150

## பிரிவு - அ

குறிப்பு : i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். 30 × 1 = 30

1. தூதுவளையின் தாவரவியல் பெயர்

அ) *சொலானம் ட்ரைலோபேட்டம்* ஆ) *வைத்தானியா சாம்னிஃபெரா*

இ) *டாட்டூரா ஸ்ட்ரோமோனியம்* ஈ) *அட்ரோபா பெல்லடோனா.*

2. பாரா இரப்பர் தாவரத்தின் இருசொல் பெயர்

அ) *மானிஹாட் கிளாசியோவி* ஆ) *ஃபில்லாந்தஸ் எம்பிளிக்கா*

இ) *ஹீவியா பிரேசிலியன்ஸிஸ்* ஈ) *ஜட்ரோபா குர்காஸ்.*

3. லிப்ரிஃபார்ம் நார்கள் எனப்படுவது

அ) ஃபுளோயம் நார்கள் ஆ) டிரக்கீடுகள்

இ) ஸ்கிளீரன்கைமா நார்கள் ஈ) சைலம் நார்கள்.

4. துணை செல்கள் .................... ல் மட்டுமே காணப்படுகின்றன.

அ) ஜிம்னோஸ்பெர்ம்கள் ஆ) டெரிடோபைட்டுகள்

இ) ஆஞ்சியோஸ்பெர்ம்கள் ஈ) தாலோபைட்டுகள்.

[ Turn over

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

5. இருபக்க ஒருங்கமைந்த வாஸ்குலார் கற்றைகள் காணப்படும் தாவரக்குடும்பம்

அ) மால்வேசி ஆ) குக்கர்பிட்டேசி

இ) சொலானேசி ஈ) மியூசேசி.

6. துவக்கும் சங்கேதம் .................... ஆகும்.

அ) AUA ஆ) AUC

இ) AUG ஈ) UUG.

7. *அக்ரோபாக்டீரியம் டிமிஃபேசியன்ஸ்* ஒரு

அ) *எஸ்செரிசியா கோலை* பாக்டீரியா ஆ) மண்வாழ் பாக்டீரியா

இ) ஒட்டுண்ணி பாக்டீரியா ஈ) கூட்டுயிரி பாக்டீரியா.

8. ரத்த அழுத்தத்தைக் குறைக்கப் பயன்படும் பொருள்

அ) இன்டர்லியூக்கின் ஆ) இன்சுலின்

இ) ரெனின் தடுப்பான்கள் ஈ) இன்டர்ஃபெரான்.

9. இரண்டு புரோட்டோபிளாஸ்டுகளுக்கிடையே இணைவை உண்டாக்கும் இணைவு காரணி

அ) பாலி எத்திலின் கிளைக்கால் ஆ) பாலிவினைல் குளோரைடு

இ) பாலிஈத்தேன் கிளைக்கால் ஈ) பாஸ்பாரிக் ஈத்தேன்.

10. ஈஸ்ட் சாறு உயிருள்ள ஈஸ்ட் செல்களைப் போலவே திராட்சை ரசத்தில் நொதித்தலை ஏற்படுத்த முடிவதை கண்டறிந்தவர்

அ) புச்னர் ஆ) குன்

இ) பாஸ்ட்சர் ஈ) கோஷ்லாண்ட்.

11. நெற்பயிரில் 'கோமாளித்தன நோயை' உருவாக்குவது

அ) ஆக்ஸின் ஆ) அப்சிசிக் அமிலம்

இ) சைட்டோகைனின் ஈ) ஜிப்ரலின்.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

12. நீள்பகல் தாவரத்திற்கு எடுத்துக்காட்டு

அ) கோதுமை ஆ) சூரியகாந்தி

இ) மக்காச்சோளம் ஈ) புகையிலை.

13. இந்தியாவில் காப்புரிமைக்காலம் .................. ஆண்டுகளாகும்.

அ) 3 ஆ) 4

இ) 5 ஈ) 6.

14. நிலக்கடலையில் டிக்காநோயை உருவாக்கும் நோயுயிரி எது ?

அ) *செர்கோஸ்போரா பெர்சனேடா* ஆ) *பைரிகுலேரியா ஒரைசே*

இ) *சாந்தோமோனாஸ் சிட்ரி* ஈ) துங்ரோ வைரஸ்.

15. தொட்டாற்சிணுங்கி அல்லது டச்-மி-நாட் தாவரத்தின் இருசொற்பெயர்

அ) *சொலானம் நைக்ரம்* ஆ) *மைமோசா பூடிகா*

இ) *சிசஸ் குவாட்ராங்குலாரிஸ்* ஈ) *ஏகில் மார்மிலாஸ்.*

16. ரெப்பினெட் ஹெர்பேரியம் எங்கு உள்ளது ?

அ) மதுரை ஆ) கோயம்புத்தூர்

இ) கடலூர் ஈ) திருச்சி.

17. இரு சொற்பெயரிடு முறையை அறிமுகப்படுத்தியவர்

அ) கரோலஸ் லின்னேயஸ் ஆ) காஸ்பர்டு பாஹின்

இ) சர் ஜோசப் டால்டன் ஹூக்கர் ஈ) அடால்ஃப் எங்ளர்.

18. மானோக்ளமைடியே துணைவகுப்பில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை

அ) 46 ஆ) 56

இ) 66 ஈ) 36.

19. ஒரறையுடைய மகரந்தப்பை காணப்படும் குடும்பம்

அ) சொலானேசி ஆ) யூஃபோர்பியேசி

இ) மால்வேசி ஈ) மியூசேசி.



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

20. ஆஸ்கினோமினி ஆஸ்பிரா ஒரு

அ) நீர்த்தாவரம் ஆ) இடைநிலைத்தாவரம்

இ) வறள் நிலத்தாவரம் ஈ) லித்தோபைட்.

21. புரோட்டோசைல இடைவெளி கொண்டுள்ள வாஸ்குலார் கற்றை .................... ல் காணப்படுகிறது.

அ) இருவித்திலைத் தாவரவேர் ஆ) ஒருவித்திலைத் தாவரவேர்

இ) இருவித்திலைத் தாவரத்தண்டு ஈ) ஒருவித்திலைத் தாவரத்தண்டு.

22. தண்டின் இரண்டாம் நிலை வளர்ச்சியின் போது உருவாக்கப்படும் பாதுகாப்பு அடுக்கின் பெயர்

அ) புறத்தோல் ஆ) பெரிடெர்ம்

இ) ரைசோடெர்மிஸ் ஈ) புறணி.

23. டபுள் மினிட்ஸ் குரோமோசோம் காணப்படும் செல்கள்

அ) எபிதீலியல் செல்கள் ஆ) எலும்பு செல்கள்

இ) எய்ட்ஸ் செல்கள் ஈ) புற்றுநோய் செல்கள்.

24. ஜீனின் செயல்பாட்டு அலகு

அ) சிஸ்ட்ரான் ஆ) ரெக்கான்

இ) மியூட்டான் ஈ) மைக்ரான்.

25. நல்லிசோமி இவ்வாறு குறிப்பிடப்படுகிறது

அ) $2n - 1$ ஆ) $2n + 1$

இ) $2n + 2$ ஈ) $2n - 2$.

26. பெப்ஸின் அதிக வினைத்திறன் கொண்டு .................... ல் காணப்படும்.

அ) கார ஊடகம் ஆ) நடுநிலை ஊடகம்

இ) அமில ஊடகம் ஈ) உப்பு ஊடகம்.

27. வாண்டா தாவரம் ஒரு

அ) முழு ஒட்டுண்ணி ஆ) தொற்றுத் தாவரம்

இ) பகுதி ஒட்டுண்ணி ஈ) மட்குண்ணி.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



28. பின்வருவனவற்றுள் எது $C_4$ தாவரம் ?

அ) நெல்  ஆ) கோதுமை

இ) உருளை  ஈ) கரும்பு.

29. பென்டோஸ் பாஸ்பேட் வழித்தடத்தைக் கண்டுபிடித்தவர்

அ) டிக்கன்ஸ்  ஆ) கால்வின்

இ) கிரப்ஸ்  ஈ) எம்டன்.

30. முழுமையாக ஆக்சிஜனேற்றமடையும் ஒரு குளுக்கோஸ் மூலக்கூறிலிருந்து கிடைப்பது

அ) 36 ATP  ஆ) 38 ATP

இ) 35 ATP  ஈ) 2 ATP.

## பிரிவு - ஆ

*குறிப்பு :* எவையேனும் **பதினைந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.  15 × 3 = 45

31. டாட்டோனிம் - வரையறு. ஓர் எடுத்துக்காட்டு தருக.

32. வெக்ஸில்லம் என்றால் என்ன ?

33. யூஃபோர்பியேசிக் குடும்பத்தின் ஏதேனும் மூன்று வகையான மஞ்சரிகளை எடுத்துக்காட்டுகளுடன் எழுதுக.

34. மியூசேசி குடும்பத்தின் வகைப்பாட்டு நிலையை எழுதுக.

35. யூஸ்டீல் என்றால் என்ன ?

36. ஒரு ஜீன் ஒரு நொதி கோட்பாடு ஏன் ஒரு ஜீன் ஒரு பாலிபெப்டைடு கோட்பாடு என மாற்றியமைக்கப்பட்டது ?

37. வேதி திடீர்மாற்றக் காரணிகளை கூறுக.

38. மொழியாக்கம் என்றால் என்ன ?

39. ஜீன் துப்பாக்கி முறையில் DNA-வை செலுத்துதல் என்றால் என்ன ?

40. தனி செல் புரத உற்பத்திக்கு பயன்படும் இரண்டு பாக்டீரியாக்களின் பெயர்களை எழுதுக.

41. முழுநொதிகள் என்றால் என்ன ?

42. ஒளிச்சுவாசத்தை - வரையறு.

[ Turn over



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

43. நீர் ஒளிப்பிளத்தல் என்றால் என்ன ?

44. இருவடிவப் பசுங்கணிகங்கள் என்றால் என்ன ?

45. ஆக்சிஜனேற்ற பாஸ்பரிகரணம் என்றால் என்ன ?

46. சுவாச ஈவு என்றால் என்ன ?

47. போல்டிங் வரையறை செய்க.

48. குளிர்ப்பதன நீக்கம் என்றால் என்ன ?

49. மண் சீர்திருத்தம் என்றால் என்ன ?

50. ஹியுமிலின் என்றால் என்ன ?

## பிரிவு - இ

*குறிப்பு* : i) எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. அவற்றுள் வினா எண் **54** ற்கு கட்டாயமாக விடை அளிக்க வேண்டும்.

ii) தேவையான இடங்களில் படம் வரைக. 7 × 5 = 35

51. அகில உலக தாவரவியல் பெயர் சூட்டுச் சட்டத்தின் ( ICBN ) முக்கிய அம்சங்கள் ஐந்தினை குறிப்பிடுக.

52. ஆஸ்ட்ரேசி குடும்பத்தின் பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.

53. சைலக்குழாய்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

54. ஒருவித்திலைத் தாவர வேரின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை படம் வரைந்து பாகங்கள் குறிக்க.

55. சாற்றுக்கட்டை மற்றும் வைரக்கட்டைப் பற்றி குறிப்பு வரைக.

56. குரோமோசோமின் அமைப்பை படம் வரைந்து பாகங்கள் குறிக்க

57. DNA வுக்கும், RNA வுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

58. DNA எவ்வாறு துண்டிக்கப்படுகிறது ?

59. தாவரத்திசு வளர்ப்பின் பயன்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

60. நொதிகளின் வகைகளை விவரி.

61. ஆக்சினுடைய வாழ்வியல் விளைவுகள் ஐந்தினை எழுதுக.

62. தாவர அறிமுகம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பிரிவு - ஈ

குறிப்பு : i) எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

ii) தேவையான இடங்களில் படம் வரைக. 4 × 10 = 40

63. பெந்தம் மற்றும் ஹூக்கரின் தாவர வகைப்பாட்டினை விவரி. ( அட்டவணை அல்லது விளக்கம் )

64. *இக்ஸோரா காக்ஸினியாவை* கலைச்சொற்களால் விவரி. மலரின் வரைபடம் மற்றும் மலரின் வாய்ப்பாடு எழுதுக.

65. இருவித்திலைத் தாவர இலையின் உள் அமைப்பை விவரி.

66. கடத்து RNA அமைப்பு மற்றும் ரைபோசோம் RNA பற்றி விவரி.

67. DNA மறுசேர்க்கை நுட்பவியல் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

68. ஒளிச்சேர்க்கையின் இருள் வினைகளை விவரி. ( அட்டவணை அல்லது விளக்கம் )

69. பென்டோஸ் பாஸ்பேட் வழித்தடம் பற்றி விவரி.

70. தாவரப் பயிர்ப் பெருக்கத்தின் குறிக்கோள்கள் யாவை ?



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers